# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

## கம்பனில் வாலி



www.saivamonline.com

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online



sspathipagam@gmail.com

G Pay +91 94440 21113

+91 94440 21113

UPI 9444021113@UPI

# 9. கம்பனில் வாலி

தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பனுக்கு என்று ஒரு நிரந்தர சிங்காசனம் உண்டு. சோழர்கள் முடி சூடி ஆண்ட காலத்தில் வாழ்ந்திருந்த கம்பனுக்குச் சேக்கிழாருக்குக் கிடைத்த வரவேற்பு கிடைக்கவில்லை. சைவர்களுக்கு, சைவம் சார்ந்திருந்த சோழர்களுக்கு, கம்பன் இராமனைக் காப்பியக் கதைத் தலைவனாகத் தேர்ந்து கொண்டமை பிடிக்காது போயிருக்கலாம். ஆட்சியாளர்களில் ஒருவனைக் கதைத் தலைவனாக நிறுத்தி ஒரு உலா, ஒரு பிள்ளைத் தமிழ், ஒரு காப்பியம் பாடி அவனுக்குப் பிழைக்கத் தெரிந்திருக்கவில்லை. அதனால்தான் ஒரு குறுநில மன்னன் சடையப்ப வள்ளல் கம்பன் காப்பியத்தில் இடம் பெற முடிந்தது. கம்பனுக்குச் சோழர்கள் மேல் கோபம் இருந்திருக்க வாய்ப்பில்லை. பின் ஏன் கம்பன் சோழர்களால் கண்டுகொள்ளப்படவில்லை?

---

*சைவர்களுக்கு, சைவம் சார்ந்திருந்த சோழர்களுக்கு, கம்பன் இராமனைக் காப்பியக் கதைத் தலைவனாகத் தேர்ந்து கொண்டமை பிடிக்காது போயிருக்கலாம்.*

---

கம்பன் தான் வாழ்ந்த காலச் சமூக அமைப்பில் [illegible] தான் இங்கே தரும் [illegible] மட்டும்தான் வாழ



www.saivamonline.com

வேண்டும் என்று சொல்லும் துணிவு எவனுக்கும் இல்லை. ஒவ்வொரு மன்னனுக்கும் எத்தனை பட்டத்து அரசியர் இருந்தனர் என்று, கல்வெட்டுக்கள் பறைசாற்றுகின்றன. எனவே, காப்பியம் ஒன்றைப் படைக்க வேண்டும் என்பதைவிட, தமிழகச் சமூக அமைப்பில், ஆடவரை நெறிநிறுத்த அவன் விரும்பியிருக்கலாம். இந்த முயற்சிக்குக் கம்பனுக்கு இராமனை விட்டால் வேறு கதி இல்லை. ஆழ்வார்கள் கிருஷ்ணாவதாரத்தையே பெரிதெடுத்துப் பாடியிருந்தும், கம்பன், பாரதம் பாடாமைக்கு மூலகாரணம் இதுவாகவே இருந்திருக்க வேண்டும். கம்பனின் கதைத் தேர்வில் இராமன் ஜெயித்தான். கம்பன் ஜெயித்தானா என்பது புலனாகவில்லை.

---

***ஒருத்திக்கு ஒருவன் என்று தான் இங்கே தரும் நியாயங்கள் பேசப்பட்டன. ஒருவன் ஒருத்தியோடு மட்டும்தான் வாழ வேண்டும் என்று சொல்லும் துணிவு எவனுக்கும் இல்லை.***

***ஆழ்வார்கள் கிருஷ்ணாவதாரத்தையே பெரிதெடுத்துப் பாடியிருந்தும், கம்பன், பாரதம் பாடாமைக்கு மூலகாரணம் இதுவாகவே இருந்திருக்க வேண்டும்.***

***தமிழ் இலக்கியங்களின் வாழ்க்கை, அதனைப் படைத்தோரின் குலமரபுகளோடு இணைந்தே அமைந்து வந்திருப்பது பலருக்கு புரிவதில்லை.***

---

தமிழ் இலக்கியங்களின் வாழ்க்கை, அதனைப் படைத்தோரின் குலமரபுகளோடு இணைந்தே அமைந்து வந்திருப்பது பலருக்குப் புரிவதில்லை. சமய இலக்கியங்களில் வாழ்வு பெற்று நிலவும் இலக்கியங்கள் யாவும், சமூக அந்தஸ்துப் பெற்ற சில மேட்டுக் குடியாளர்களால் பாடப் பெற்றவை என்பதை உணரும்போது சில உண்மைகள் புலனாகவே செய்யும். சைவத்தில் இந்தப் போக்கு நிலவியே வந்ததால்தான், வள்ளலாருக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லையோ என்று தோன்றுகிறது. வைணவத்தில் அவதாரங்களில் சில, நடுத்தர குலத்தில் வந்த போதும், அருளிச் செயல் செய்தார் சிலர் அக்குலங்களில் உதித்துவந்த போதும், அங்கீகாரமும், முதல் மரியாதைகளும் இன்றுவரை சிலருக்கு மட்டுமே என்ற நிலை தமிழகத்தில் நிலவத்தான் செய்கிறது. கம்பனும் இந்த அளவுகோலில்தான் வருகிறான். அவன் இராமகாதை அரங்கேற்றத்தில், காட்டப்பட்ட தயக்கங்களும், அவன் கவிதைகளை மேற்கோள் காட்டுவதைத் தவிர்த்த உரைகாரர்களின் விழிப்புணர்வும் நீள நினைக்கப்பட வேண்டுவன.

*கம்பனும் இந்த அளவுகோலில்தான் வருகிறான். அவன் இராமகாதை அரங்கேற்றத்தில், காட்டப்பட்ட தயக்கங்களும், அவன் கவிதைகளை மேற்கோள் காட்டுவதைத் தவிர்த்த உரைகாரர்களின் விழிப்புணர்வும் நீள நினைக்கப்பட வேண்டுவன.*

*வாலி-இராமன் போரை , அதன் முடிவை வாலி வதம் என்று பலரும் பதிவு செய்தனர். அந்த நனி நாகரிகர் பக்கம் நின்று நான் வாலியை உற்று நோக்கினேன்.*

---

20 ஆம் நூற்றாண்டில்தான் கம்பனுக்கு அவன் படைப்பாற்றலுக்கு ஏற்ற அங்கீகாரம் வரத் தொடங்கியது. கம்பன் கழகங்கள் அந்தப் புண்ணியத்தை ஏற்று நிமிர்ந்தன. பன்முகப் பார்வைகளில் அவன் படைப்பு தீட்டப் பெற்றான். அவன் கவிதை அழகும், கற்பனை வளமும், பாத்திரப் புனைவும் சீர்தூக்கிப் பார்க்கப் பெற்றன. கம்பனின் பாத்திரப் படைப்புக்களில் இனங்காணமாட்டாத சிக்கல்கள் நிறைந்தவனாக வாலி காணப்படுகிறான். வாலி-இராமன் போரை , அதன் முடிவை வாலி வதம் என்று பலரும் பதிவு செய்தனர். அந்த நனி நாகரிகர் பக்கம் நின்று நான் வாலியை உற்று நோக்கினேன். ஆடவர் ஒழுக்கம் விரும்பிய கம்பன், தம்பி மனைவியை விரும்பினான் என்று ஒருபோதும் வாலியைச் சித்திரித்திருக்க மாட்டான் என்று நான் நம்பினேன். அந்த நம்பிக்கையில் நான் கண்ட தீர்வு ஒன்றை இங்கே பதிவு செய்கிறேன்.

## கிட்கிந்தை முதல்வன்

கம்பன் படைத்த காப்பியப் பாத்திரங்களுள் கிட்கிந்தா காண்டத்தில் வரும் வாலி, தனி எடுத்து ஆராயத்தக்கவன். சுந்தர காண்டத்தில் அனுமன் முதன்மை வகிப்பதைப் போல, கிட்கிந்தா காண்டத்தின் முதன்மையை வாலிக்கு வழங்கலாம். கம்பனின் சித்திரிப்பில் வாலி நல்லவனா கெட்டவனா என்பதைத் தெளிவாகக் கற்பவர்களால் அறிந்து கொள்ள முடியாது. இராமன் தரப்பில் நின்று பார்ப்பவர்கள் அவனைத் தீயவன் என்றே காண்பர். எதிர் [illegible] அவனை [illegible] காண [illegible]. கவிஞன் [illegible] தீர்த்து வைத்திருக்க முடிந்திருக்கும். கம்பன் ஒரு நோக்கத்தை [illegible] கொண்டே வாலியைப் [illegible] முடியும்



www.saivamonline.com

*கம்பனின் சித்திரிப்பில் வாலி நல்லவனா கெட்டவனா என்பதைத் தெளிவாகக் கற்பவர்களால் அறிந்து கொள்ள முடியாது. இராமன் தரப்பில் நின்று பார்ப்பவர்கள் அவனைத் தீயவன் என்றே காண்பர். எதிர் நிலையாளர்களுக்கு அவன் நல்லவனாகவே காணப்படுவான். கவிஞன் நினைத்திருந்தால் இந்தக் குழப்பத்தை எளிதாகத் தீர்த்து வைத்திருக்க முடிந்திருக்கும்.*

## மூன்று பாத்திரங்கள்

கம்பனில் சட்டென்று அவிழ்க்க இயலாத சிக்கல்கள் நிறைந்த பாத்திரங்கள் மூன்று. அயோத்தியா காண்டத்தில் கைகேயி. கிட்கிந்தா காண்டத்தில் வாலி, யுத்தகாண்டத்தில் வீடணன். இன்று வரை கம்பனைக் கற்பார் எவரும் இரண்டு அணிகளாகப் பிரிந்து நின்றே இந்த மூன்று பாத்திரங்களையும் மதிப்பீடு செய்து வருகின்றனர். குறிப்பிட்ட ஒரு நேரத்தில் ஆத்திரத்தின் உச்சியில் நின்றோ, ஆழங்காண மாட்டாத அறிவெல்லையில் நின்றோ மேற்குறித்த மூவரும் மேற்கொண்ட செயல்கள், இன்றுவரை முற்றாக உணரப்படவில்லை. கவிஞன் தெளிவு படுத்தவும் இல்லை; தெளிவு படுத்த விரும்பியிருக்கவும் இல்லை.

*ஒரு நேரத்தில் ஆத்திரத்தின் உச்சியில் நின்றோ, ஆழங்காண மாட்டாத அறிவெல்லையில் நின்றோ மேற்குறித்த மூவரும் மேற்கொண்ட செயல்கள், இன்றுவரை முற்றாக உணரப்படவில்லை. கவிஞன் தெளிவு படுத்தவும் இல்லை; தெளிவு படுத்த விரும்பியிருக்கவும் இல்லை.*

## கவிஞனின் கடமை

எந்த ஒரு பாத்திரத்தையும் புனைய வரும் கவிஞனுக்கு அதனைக் குழப்பமின்றிப் புனைந்து காட்ட வேண்டிய கடமை உண்டு. பயில்வாருக்கு அவன் படைத்தளித்த பாத்திரத்தைப் பற்றிய வேறு வேறு கருத்துக்கள் தோன்றுமானால் படைப்பில் குறை இருப்பதாகவே கருதவேண்டும். ஏனைய பாத்திரப் படைப்புக்களில் எல்லாம் இது நல்லது, இது கெட்டது என்பதை ஐயமின்றி உணர வைக்க இயன்ற கம்பனுக்கு மேற்குறித்த மூன்று பாத்திரங்களில் அத்தெளிவை ஏன் ஏற்படுத்த இயலாது போயிற்று? படைப்பாளியின் குறை என்று கொள்வதா? வேறு காரணம் தேடுவதா?



www.saivamonline.com

*எந்த ஒரு பாத்திரத்தையும் புனைய வரும் கவிஞனுக்கு அதனைக் குழப்பமின்றிப் புனைந்து காட்ட வேண்டிய கடமை உண்டு. பயில்வாருக்கு அவன் படைத்தளித்த பாத்திரத்தைப் பற்றிய வேறு வேறு கருத்துக்கள் தோன்றுமானால் படைப்பில் குறை இருப்பதாகவே கருதவேண்டும்.*

## வாழ்வு கருதிய உத்தி

தன் படைப்பாற்றலால் ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகள் வாழ்வு பெற்று வந்திருக்கும் கம்பனைப் பாத்திரப் படைப்பில் தவறு இழைத்தவனாகக் கருத இயலாது. வேறு காரணங்களைத் தேடியேயாக வேண்டும். ஆழச் சிந்தித்தால் ஒன்று தெளிவாகிறது. சில பாத்திரங்களின் செயல்களில் காணப்படும் முரண்பாடுகளும், அவற்றைத் திட்டமிட்டே களைய முயலாத கவிஞன் போக்கும், காப்பியத்தின் வாழ்வு கருதிய ஓர் உத்தியாகவே புரிகிறது. கற்பார் காப்பியத்தை நின்று பயிலவும் இருதரப்பில் வாதிட்டு உணரவும் இந்தச் சிக்கல் ஏன் என்று நீள நினையவும், இதற்கு என்ன தான் தீர்வு என்று தேட முயலவும் அமைக்கப் பெற்ற இத்தகு பாத்திரங்கள், காப்பிய வாழ்வுக்கு மறை முகமாக உதவவே செய்கின்றன. அவிழ்க்க இயலாத கம்பன் போட்ட மூன்று முடிச்சுக்களில் ஒன்றாகவே வாலி இன்று வரை பேசப்பட்டு வருகிறான்.

*ஆழச் சிந்தித்தால் ஒன்று தெளிவாகிறது. சில பாத்திரங்களின் செயல்களில் காணப்படும் முரண்பாடுகளும், அவற்றைத் திட்டமிட்டே களைய முயலாத கவிஞன் போக்கும், காப்பியத்தின் வாழ்வு கருதிய ஓர் உத்தியாகவே புரிகிறது.*

## கேள்விக் குறியாகும் இராமன்

கைகேயி பாத்திர முரண்பாட்டால் தசரதன் மடிகிறான். பெண்மைக்கு ஒரு மாசு வந்தது போன்ற தோற்றம் ஏற்படுகிறது. வீடணனால் இராவணன் சாகிறான். செய்ந்நன்றியும், நடுவு நிலைமையும் மோதிக்கொள்கின்றன. வாலி பாத்திரத்தால் வாலியே சாகிறான். இராமன் கேள்விக் குறியாக்கப்பட்டு விடுகிறான். கவிஞனுக்கு வாலி பாத்திரப்படைப்பில்தான் அதிக கவனம் தேவைப்படுகிறது. காப்பியத் தலைவன் செயலையே கேள்விக்குறியாக்கும் நிலைக்களத்தில், கம்பன் எவ்வாறு செயல்படுகிறான் என்பதை ஆராய்ந்தால், காப்பியப் படைப்பாற்றலின் வெற்றி தோல்வியை மதிப்பிடுவது எளிமையாகும்.



www.saivamonline.com

## கம்பனின் நடுநிலைமை

இறையவர்களே பாத்திரங்களாக வரும் கதைகளைப் புனைய முயலும் கவிஞர்களுக்குப் பல சங்கடங்கள் உண்டு. கவிஞன் வெறும் படைப்பாளியாக நிற்காமல் பக்தனாகவும் இருந்தால், கடவுளர் பாத்திரப்புனைவுகளில் கவிஞன் தர்ம சங்கடங்களுக்கு ஆளாக நேரிடும். இராம காதையில் நாராயண மூர்த்தியே இராமனாக வருகிறான். கம்பனோ, இராம பக்தன். கதை நடத்தப்படும் கவிஞன் காலத் தமிழ்ச் சமுதாயமோ, ஆழ்வார்கள் அருளிச் செயல்களால் பத்திமையில் தலை நின்றிருந்தது. இத்தகு ஒரு சூழ்நிலையில் இராமனுக்கு எதிரான ஒரு பாத்திரத்தைக் கவிஞன் எப்படி நடு நிலைமையோடு படைத்திருக்க இயலும் என்ற ஐயம் நம்முன் எழவே செய்யும். வாலி பாத்திரப் படைப்பில் மேற்குறித்த ஐயங்கள் அகலக் கம்பன் முயன்றுள்ளானா என்பதை நாம் தேடியாக வேண்டும்.

---

***கவிஞன் வெறும் படைப்பாளியாக நிற்காமல் பக்தனாகவும் இருந்தால், கடவுளர் பாத்திரப்புனைவுகளில் கவிஞன் தர்ம சங்கடங்களுக்கு ஆளாக நேரிடும். இராம காதையில் நாராயண மூர்த்தியே இராமனாக வருகிறான். கம்பனோ, இராம பக்தன். கதைநடத்தப்படும் கவிஞன் காலத் தமிழ்ச் சமுதாயமோ, ஆழ்வார்கள் அருளிச் செயல்களால் பத்திமையில் தலை நின்றிருந்தது. இத்தகு ஒரு சூழ்நிலையில் இராமனுக்கு எதிரான ஒரு பாத்திரத்தைக் கவிஞன் எப்படி நடு நிலைமையோடு படைத்திருக்க இயலும் என்ற ஐயம் நம்முன் எழவே செய்யும்.***

---

## வாலி பன்முக ஆற்றல்கள்

பாரத நாட்டின் தென்பகுதியில் அமைந்திருந்த ஒரு நாடு கிஷ்கிந்தை. அந்நாட்டின் மன்னன் வாலி. அளப்பரிய ஆற்றல் பெற்ற பெருவீரன். சிவபக்தன். ஒரு நேரத்தில் இராவணனையே வெற்றி கொண்டவன். அவன் பின் பிறந்தவன் சுக்ரீவன். அனுமன் கிஷ்கிந்தை ஆட்சியில் ஓர் அமைச்சுப் பொறுப்பில் இருந்தவன். கிஷ்கிந்தையில் வாலி தலைமையில் நல்லாட்சி நடந்து வந்தது. வாலி தன்தம்பியை இளவரசாக வரித்துக் கொண்டு அன்பு செய்தவன். மேலாகத் தயரதன் முடி துறந்தமையை அறிந்து, அவன் மேல் மதிப்புக் கொண்டிருந்தவன். துறவு பூண்டு காட்டு வாழ்வை மேற்கொண்டு வந்த இராமனை அவன்



www.saivamonline.com

நல்அறமூர்த்தியாக மதித்து வாழ்ந்தவன். வாலி மனைவி தாரையும் அரசியல் தெளிவு மிக்கவள்.

## குரங்கல்லன்; மன்னன்

கங்கைக் கரைக் காவலன் குகன். அவன் வேட்டுவர் குல வேந்தன். இராவணன் இலங்கைக் காவலன். அவன் குலத்தை அரக்கர் குலம் என்பர். தசரதன் கோசல நாட்டின் தலைவன். நாட்டுப் பகுப்பால் மக்கள் இயல்புகளால் அவை வேறு வேறு பெயர்களைப் பெற்றிருந்தன. இராம காதையில் வரும் எல்லா நாடுகளும் நாடுகளே. எல்லாரும் மனிதர்களே. தோற்ற வேறுபாடு காரணமாகவும் குண இயல்புகள் காரணமாகவும் வளர்ச்சி அடைந்த சமூகத்தார் பிறரை வேறு பெயரிட்டு அழைத்தனர். வாலி குரங்கு அல்லன். இராவணனும் மானுடனே. குரங்குக்கும் அரக்கருக்கும் எப்படிச் சிவபக்தி இருந்திருக்க முடியும்? வாலியை விலங்கினமாகக் கொள்வதோ வால் இருப்பதாகக் குறிப்பதோ அறிவாராய்ச்சியோடு பொருந்துவது அன்று. வாலி வதம் இராவணவதம் என்பதெல்லாம் புராண இலக்கியக் குறியீடுகள்.

---

*இராம காதையில் வரும் எல்லா நாடுகளும் நாடுகளே. எல்லாரும் மனிதர்களே. தோற்ற வேறுபாடு காரணமாகவும் குண இயல்புகள் காரணமாகவும் வளர்ச்சி அடைந்த சமூகத்தார் பிறரை வேறு பெயரிட்டு அழைத்தனர். வாலி குரங்கு அல்லன். இராவணனும் மானுடனே. குரங்குக்கும் அரக்கருக்கும் எப்படிச் சிவபக்தி இருந்திருக்க முடியும்?*

---

## வாலி பெற்றிருந்த வரம்

வாலிக்கு ஓர் அதீத ஆற்றல் இருந்ததாகக் கம்பன் குறிக்கிறான். தன் எதிரில் போராட வரும் பகைவன் எவனாயினும், அன்னவன் ஆற்றலில் பாதி ஆற்றலைத் தனதாக்கிக்கொள்ளும் வரம் வாலி பெற்றிருந்தான் என்கிறார் கம்பர்.

> *"கிட்டுவார் பொரக் கிடைக்கின் அன்னவர்*
> *பட்ட நல்வரம் பாகம் எய்துவான்"*

வாலியின் வஞ்சகப்போருக்கு இதனை ஒரு வாயிலாக எப்படிக் கருத முடியும்? இராமன் ஓர் அம்பு விடுத்தால் அது ஏழு மரா மரங்களைத் துளைத்துவிட்டு மீண்டும் அம்பறாத் தூணிக்கு வந்து சேர்வதாகக் கம்பன்



www.saivamonline.com

புனைகிறானே? இராவணனுக்கும் கூட,

> *"எக்கோடி யாராலும் வெலப்படாய்*
> *எனக் கொடுத்த வரம்"*

இருப்பதாகக் கம்பன் குறித்துள்ளானே. எக்கோடியாராலும் வெல்லப்படாய் என்ற வரபலம் பெற்றிருந்த இராவணனுக்கு எதிர் சென்று நின்று போரிட்டு இராவணனை வீழ்த்தும் வல்லமை பெற்ற இராமனுக்கு ,வாலி பெற்ற வரம் எப்படி வெற்றிக்குத் தடையாக முடியும்?

## பாகம் எய்துதல் - ஓர் ஆய்வு

வாலி பெற்றிருந்த வர ஆற்றல் என்பது ஒரு பெருமிதம். நாடறிந்த ஒரு இசை மேதை அரங்கின் முன் வரிசையில் வந்து அமர்ந்து விட்டால் வளர்ந்து வரும் பாடகனுக்கு ஏன் தடுமாற்றம் ஏற்படுகிறது? ஐயா உங்களைப் போன்ற பெரிய பேச்சாளர் எதிரில் இருக்கும்போது எனக்குப் பேச்சே வரவில்லை என்று நன்கு பேசும் ஆற்றல் பெற்றவன் உரைப்பது நமக்குப் புரிகிறதே! குரு நாதனுக்கு முன் சீடன் மௌனியாகி நிற்பதாக ஆன்மிகத்தில் ஆயிரம் கதை உள்ளதே. கலகலப்பானபெண் காதலனுக்குமுன் நாண முறுவது எதனால்? போர் முனையில் கும்பகர்ணன் போராற்றல் கண்டு வள்ளலும் மலர்க்கரம் விதிர்ப்புற்றான் என, இராமன் மேனி நடுக்கமுற்றான் என்று கம்பன் உரைப்பதற்கு என்ன பொருள்? வாலி போராற்றலை நேரில் கண்டு அவனை எதிர்கொள்வார், வாலியின் பேராற்றல் கண்டு மனத்தளவில் அடையும் பின்னடைவே பகைவனின் ஆற்றலைப் பாதியாக்கும் என்பது தானே கருத்தாதல் இயலும்.

---

*போர் முனையில் கும்பகர்ணன் போராற்றல் கண்டு வள்ளலும் மலர்க்கரம் விதிர்ப்புற்றான் என, இராமன் மேனி நடுக்கமுற்றான் என்று கம்பன் உரைப்பதற்கு என்ன பொருள்? வாலி போராற்றலை நேரில் கண்டு அவனை எதிர்கொள்வார், வாலியின் பேராற்றல் கண்டு மனத்தளவில் அடையும் பின்னடைவே பகைவனின் ஆற்றலைப் பாதியாக்கும் என்பது தானே கருத்தாதல் இயலும்.*

---

## சுக்ரீவன் குறைபாடுகள்

சுக்ரீவன், எவ்வகையிலும் வாலிக்கு நிகரானவன் அல்லன்.



www.saivamonline.com

சொன்ன சொல் போற்றாத மறதி உடையவன். குடிகாரன். அச்சம் மிகுந்தவன். தான் உயிர் பிழைக்கத் தப்பி ஓடி ஒளிய முயன்றபோது, தன் மனைவியையும் உடன் அழைத்துச் செல்ல முயலாதவன். அண்ணன் வாலியின் பெருவீரத்தை உணர இயலாத அறிவுக் குறைஉடையவன். பின் விளைவு நோக்காது போர்முனையில் தவறு செய்தவன். போர் மரபுகளைப் போற்றாதவன். தன் குற்றம் நோக்காது பிறர் குற்றம் காட்டி உரைக்கும் இயல்பினன். அறிஞன் அனுமனைத் துணை கொண்டு, வாலி மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தச் செய்தவன். உணர் வெல்லையில் நின்ற இராமனை ஆராய்ந்து முடிவெடுக்க வாய்ப்பளிக்காது தன்னலத்திற்காகப் பிழையான பாதையில் இட்டுச்சென்றவன். அவன் ஒரே பலம் அனுமன்.

## இராமன் சினம் ஒரு புரியாத புதிர்

நீ எனக்களித்த நாட்டை, இப்போது நான் உனக்களிக்கிறேன். ஏற்று, அயோத்தி அரசைத் தலைமை ஏற்று நடத்து என்று இராமன் வேண்டியதை, பரதன் ஏற்க மறுத்தான். அவன் பண்பைப் பெரிதாகப் போற்றுபவன் இராமன். தன் அண்ணனைக் கொல்ல இவன் உன்னை எமனாக்க முயல்கிறான் என்று இலக்குவன் உரைத்தபோது,

*எத்தாயர் வயிற்றினும் பின்பிறந்தார்கள் எல்லாம்*
*ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ*

என்று கூறி, நாட்டாட்சி ஏற்க மறுத்த பரதனை உத்தமனாகக் கண்ட இராமனுக்கு, அண்ணன் மரணமடைந்தான் என்பதை உறுதி செய்து கொள்ளாது, அமைச்சர் உரை கேட்டு அரியணை ஏறிய சுக்ரீவன் செயலைக் குற்றமாகக் காண இயலாது போனது எதனால் என்ற வினாவிற்குக் காப்பியத்தில் விடை இல்லை. பரதனிடம் அண்ணன் பாசத்தை இனங்கண்டு மகிழ முடிந்த இராமனுக்குச் சுக்ரீவனிடம் அவன் செயல் குறித்த சினமே மூண்டிருக்க வேண்டும். மாறாக வாலி மேல் ஏற்பட்ட கோபம் புதிராகவே நிற்கிறது.

---

*பரதனிடம் அண்ணன் பாசத்தை இனங்கண்டு மகிழ முடிந்த இராமனுக்குச் சுக்ரீவனிடம் அவன் செயல் குறித்த சினமே மூண்டிருக்க வேண்டும். மாறாக வாலி மேல் ஏற்பட்ட கோபம் புதிராகவே நிற்கிறது.*

---



www.saivamonline.com

## பாத்திரம் என்றால் என்ன?

உலோகங்களால் ஆன கொள்கலன்களுக்குப் பாத்திரம் என்பது பெயர். இது சோழ நாட்டு வழக்குமாகும். மண்ணுக்கும் இது பொருந்தும். மண்பாத்திரத்தைப் பாண்டம் என்பர். பொங்கலுக்கு மண்பாண்டம் வாங்கும் தமிழ் மகளிர், பானையைக் கையில் எடுத்து, நகம் சுண்டிப் பல இடங்களில் தட்டி, காதோரம் வைத்து, ஒத்த ஓசை வருகிறதா எனக் கவனித்தே வாங்குவர். எல்லா இடத்திலும் ஒரே ஓசை வந்தால் அது சரியான பாத்திரம். வேறு வேறு ஓசை ஒரே பாத்திரத்தில் வந்தால், அப்பாத்திரத்தில் குறை உள்ளது என்பது மகளிருக்கும் தெரிந்தது. காப்பிய மாந்தர்களைப் பாத்திரம் என்பது இது பற்றித்தான். கவிஞன் படைப்பில் அவன் படைத்த பாத்திரம், பண்புகள் மற்றும் செயல்பாடுகளில் முரண்படாது அமைதல் வேண்டும். முரண்பட்டால் பாத்திரத்தில் குறையும் படைப்பாளி மேல் குற்றமும் வந்து சேரும். இது நினைவு கூரத்தக்கது.

## இராமனின் போர் நெறிகள்

பெண் ஒருத்தி மீது அம்பு எய்வது, ஆண்மைக்கு இழுக்கு என்பது போர் நெறி. இராமன் அதனைப் போற்றி நின்ற மாவீரன். விசுவாமித்திரன் கட்டளை இட்டபோதும், பெண் என மனத்திடை நினைத்துத்தயங்கினான் இராமன். கம்பன் அப்பண்புக்காகப் பெருந்தகை, என்ற பட்டத்தை உடனடியாக இராமனுக்கு வழங்கினான். பகைவர்களுக்கு உரிய வாய்ப்பளிப்பது வீரத்தின் முதன்மை அடையாளம். பேராண்மையை விளக்கவந்த வள்ளுவனும் பகைவனுக்கு ஒரு தீங்கு வந்தபோது கருணை காட்டுவதிலேயே பேராண்மை அழகு பெறும் என்று இனங்காட்டிப் போந்தான்.

*ஒன்று உற்றக்கால்*
*ஊராண்மை மற்றதன் எஃகு*

என்பது வள்ளுவன்வரிகள். போர்க்களத்தில் எல்லாம் இழந்துநின்ற இராவணனை இன்று போய்ப் போர்க்கு நாளைவா எனக் கூறத் தெரிந்திருக்கிறது. இராவணன் மேல் போர் தொடுப்பதற்கு முன்பாக அவன் தரப்பு வாதங்களைத் தெரிவிக்க, அங்கதனை அவன்பால் தூதனுப்பும் பண்பும் இராமனிடம் இருந்திருக்கிறது.



www.saivamonline.com

## பாத்திரத்தின் குறையா? படைத்தவன் குற்றமா?

தாடகை வதம், வாலியை வீழ்த்துவதற்கு முன்பு நிகழ்ந்தது. இராவண வதம் பின்னர் நிகழ்ந்தது. முன்னமும் அறநெறி உணர்ந்தேயிருந்தான் இராமன். பின்னரும் அந்நெறி அவன் போற்றி நின்றிருக்கிறான். இடையில் வாலிக்கு அவன் தரப்பு எடுத்துரைக்க ஒரு வாய்ப்பை அவன் தர ஏன் முயலவில்லை. காடேகச் செய்த கைகேயியையும் கூனியையும் கூட மன்னிக்க இயன்ற இராமனுக்கு, வாலிக்கு ஏன் ஒரு வாய்ப்பளிக்க இயலாது போயிற்று? பானைக்குள் சோறு இருக்கும் என்று கைவிட்ட குழந்தையை, உள்ளிருந்து ஒரு தேள் கொட்டுமானால் அது கொடுமை அல்லவா? இராமன், அண்ணன் தம்பிச் சண்டையில் இடை புகுந்து ஒரு தரப்புக்குச் சார்வாக நடக்கமாட்டான் என்று வாலி திடமாக நம்பினானே, அந்த நம்பிக்கையை இராமன் பொய்க்க வைத்தது முரண்பாடு அல்லவா? இது பாத்திரத்தின் குறைபாடா? படைத்தவனின் குற்றமா? இரண்டும் இல்லை என்றால் இதற்குத் தீர்வு தான் என்ன?

---

***இராமன், அண்ணன் தம்பிச் சண்டையில் இடை புகுந்து ஒரு தரப்புக்குச் சார்வாக நடக்கமாட்டான் என்று வாலி திடமாக நம்பினானே. அந்த நம்பிக்கையை இராமன் பொய்க்க வைத்தது முரண்பாடு அல்லவா? இது பாத்திரத்தின் குறைபாடா? படைத்தவனின் குற்றமா? இரண்டும் இல்லை என்றால் இதற்குத் தீர்வுதான் என்ன?***

---

## அனுமன் கூற்றில் உண்மை உண்டா?

வாலி ஒழுக்கமற்றவன் என்பது போன்ற ஒரு தோற்றத்தை முதன் முதல் உருவாக்குகின்றான் அனுமன். அருகில் இருந்த சுக்ரீவன் அப்படி இல்லை என்று மறுத்துரை செய்யாது மௌனத்தால் அனுமன் கூற்றை உடன்படுவான் போல் நிற்கிறான். மூல நூல் சித்திரிப்பில் வாலி அப்படிப்பட்டவன்தான். கம்பனுக்கு அது உடன்பாடா? அனுமன்,

*உருமை என்று இவர்க்கு உரிய தாரம் ஆம்*
*அரு மருந்தையும் அவன் விரும்பினான்*

என்கிறானே அது உண்மைதானா? அனுமன் உரைப்பன எல்லாம் கம்பன் உரைப்பனதாமே! அனுமன் பொய் உரைப்பானா?



www.saivamonline.com

காப்பியத்தின் அறநெறி பாத்திரம் அல்லவா அவன்? காப்பிய ஆசிரியன் தன் கருத்தெடுத்து நாட்டப்பல விடத்தும் அனுமனையே பயன் கொள்வான் என்று அறிஞர் உலகம் கூறுகிறதே! எனவே, அனுமன் கூறியவாறு, தம்பி மனைவியை வாலி பெண்டாள நினைந்தான் என்று எடுத்துக்கொள்ளலாமா?

## மனமாற்றத்தில் வந்த விடை

வாலி, இராமன் கை அம்பால் வீழ்ந்து கிடக்கும் நேரத்தில் ஒரு நீண்ட உரையாடலை, மூல இலக்கியத்திற்கு மாறாகக் கம்பன் பதிவு செய்கிறான். வாலி மீது குற்றச் சாட்டுக்களை அடுக்கும் இராமன்,

*அருமை உம்பிதன் ஆர் உயிர்த் தேவியைப்*
*பெருமை நீங்கினை எய்தப் பெறுதியோ?*

என்று வினாத் தொடுக்கிறான். உடனே வாலி பதில் உரைத்திடவில்லை. இடையில் இராமன் வாலியை மறைந்து நின்று கொன்றமைக்கு வேறு சில காரணங்களைக் கூறுகிறான். அதற்குப் பின்னரே வாலி,

*ஐய நுங்கள் அருங்குலக் கற்பின் அப்*
*பொய் இல் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சிபோல்*
*செய்திலன் எமைத் தேமலர் மேலவன்*

எனக் குலஇயல்பு உரைக்கிறான். வாலியின் கூற்றில் நேரடியான விடை இல்லை.

## ஒப்புதலா? தன்னிலை விளக்கமா?

ஒழுக்கம் மிக்க ஒரு சமூக அமைப்பில் பிறந்து வளர்ந்தவன் இராமன். கிஷ்கிந்தையில், அயோத்தியில் நிலவும் ஒழுக்கமுறை தம்மிடையே இல்லை என்பதை வாலி உடன்படுகிறான். அவன் உரைத்த பதிலில் தம்பி மனைவியைத் தான் ஆண்டது உண்மைதான் என்ற ஒப்புதல் உள்ளதா? அல்லது உங்கள் நாட்டு ஒழுக்க முறை வேறு, எங்கள் நாட்டு நிலை வேறு என்ற பொதுவான தன்னிலை விளக்கம் மட்டும் காணப்படுகிறதா என்பதைப் பலர் சிந்திக்க மறந்துவிட்டதாகவே தெரிகிறது.

## கம்பன் உடன்படவில்லை

அனுமன் மிக விழிப்பாகவே பேசினன். தம்பி மனைவியைப் பெண்டாண்டான் என்று உரையாது அருமருந்தையும் அவன்



www.saivamonline.com

விரும்பினான் என்றே பொதுப்படப் பேசினான். கம்பன் இராமனைப் பேசவைத்தபோதும் கூட அடைந்தான் என்று கூறாது, உம்பி தன் ஆருயிர்த்தேவியைப் பெருமை நீங்கினை எய்தப் பெறுதியோ என்றே பேசவைக்கிறான். எய்தப் பெறுதியோ என்பது எய்து வாயோ? என்றே பொருள் தந்து நிற்கிறது. எய்தினான் என்று இராமனும் ஏற்காது, அடையப் போகிறாயோ என்றே வினவுகிறான். இக்களம் சிந்திக்கத்தக்கது. வாலி மறைவுக்குப்பின் அவன் மனைவி தாரை அழுது புலம்பும் பதிவிலும், உன் அழிவுக்குத் தம்பி மனைவி மீது கொண்ட காமமல்லவா காரணமாயிற்று என்று எந்த இடத்திலும் குறிப்பில்லை. இராவணன் அழிவில் அவ்வாறு அவன் மனைவி மண்டோதரியைப் பேசவைத்த கம்பன் தாரையை ஏன் அவ்வாறு பேச வைக்கவில்லை? இராமகாதை படைத்த கம்பனுக்கு, இக்குற்றச்சாட்டு ஏற்புடையதா? இல்லை என்றே தோன்றுகிறது.

---

***வாலி மறைவுக்குப்பின் அவன் மனைவி தாரை அழுது புலம்பும் பதிவிலும், உன் அழிவுக்குத் தம்பி மனைவி மீது கொண்ட காமமல்லவா காரணமாயிற்று என்று எந்த இடத்திலும் குறிப்பில்லை. இராவணன் அழிவில் அவ்வாறு அவன் மனைவி மண்டோதரியைப் பேசவைத்த கம்பன் தாரையை ஏன் அவ்வாறு பேச வைக்கவில்லை?***

---

## ஆய்வாளர்கள் செய்யும் பிழை

தன்னை, மறைந்து நின்று அம்பெய்து கொன்ற, இராமனைப் பலவாறு வாலி சாடுவதாகக் கம்பன் களம் அமைக்கிறான். ஓர் இடத்தில் நீ தயரதன் மகன் தானா? பரதனுக்கு அண்ணன் என்பதும் உண்மைதானா? என்று வினாத் தொடுக்கிறான். யானை என்று கருதி ஒரு சிறுவன் மேல் அம்பு எய்த குற்றத்தை ஏற்றுக்கொண்டவன் தயரதன். பசுவுக்கும், புறாவுக்கும் அருள் செய்த மரபில் வந்தவன். அண்ணன் மீது, தம்பி கொள்ள வேண்டிய உறவு முறைக்குப் புதிய இலக்கணம் படைத்தவன் பரதன். இவையாவும் வாலிக்குத் தெரிந்தே இருக்கிறது. உன்செயல், நின் குல மரபுக்கு இசைவானது அன்று என்று, வாலி குற்றம் சாட்டுகிறான். இராமன் தரப்பில் பதில் இல்லை. தயரதன் சிறப்புரைக்கப்புகும் கம்பன் ஆய்வாளர் பலரும், வாலியின் இந்தக் கூற்றை அவன் பெருமைக்கு மேற்கோள் காட்டுகின்றனர். பரதனைச் சிறப்பிக்கவும் வாலி கூற்றைப் பயன்கொள்கின்றனர். காரணம் வாலியின்



www.saivamonline.com

மதிப்பீடுகள் உண்மையானவை. என்றாலும், அன்னார் இராமன் பற்றி வாலி கூறுவனவற்றை ஆத்திரத்தில் உரைத்த கூற்றுக்கள் என்று விலக்கமுயல்கின்றனர். இத்தகு போக்கு ஆய்வுலகில் ஏற்கப்படுவதில்லை.

## இலக்குவன் விடை ஏற்புடையதா?

வாலியை வேண்டுமளவு பேசவிட்ட கம்பன், நிறைவாக ஒரு வினாவை வாலி கூற்றாக முன்வைக்கிறான். இராமன் பல பட உரைத்த பதில் உரைகளுக்கெல்லாம், வாலி உரைத்தது 'அனையது ஆக' எனபதே. நீ உரைத்தவாறு அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும் என்பதே அதற்குப் பொருள். அதுசரி, நீ எதனால் என்னை மறைந்து நின்று ஒரு விலங்கினை வீழ்த்துவது போல் அம்பு எய்தாய் என்கிறான் வாலி.

***செருக்களத்து எதிர்த்து எய்யாதே***
***வெல்விய புளிஞர் என்னன விலங்கியே மறைந்து***
***வில்லால் எவ்வியது என்னை?***

என்பன கம்பனின் பதிவு. இராமனிடமிருந்து பதில் இல்லை. இலக்குவன் எதோ ஒரு விடை கூறுகிறான். வாலி அதைக் கட்டுரை என்று விலக்குகிறான். பல படப் பேசிய இராமனிடம் , மறைந்து நின்று கொன்றது ஏன் என்ற கேள்விக்கு விடையிருக்கவில்லை. இலக்குவன் கூறிய விடை, இராமனுக்கு உடன்பாடா என்பதையும் கம்பன் அறிவிக்கவில்லை.

## தீர்வுகள் தேடல்

இது ஒரு முழு நூல் முயற்சி அன்று. ஒரு சிறு அறிமுகக் கட்டுரை. வாலி பற்றிய அனைத்துத் தரப்பு வாதங்களையும் முற்றாக எடுத்து ஆராயும் களம் இது அன்று. இன்றியமையாச் சிலவற்றை முன்னிலைப்படுத்திக் கம்பன் நிலைப்பாட்டை எடுத்துரைப்பதே கட்டுரையாளனின் எண்ணம். இவை போதுமானவை என்பதும் உண்மை. இனி, சில தீர்வுகளைக் கண்டு தெளிந்தால், வாலி பாத்திரப் புனைவின் பேரழகு நன்கு புலனாகும். காப்பியத்தை ஊன்றிப் பயில்வாருக்கு ஒன்று புலப்படும். இராவணனை வெற்றி கொண்டு, சீதையை மீட்பதற்குக் கிஷ்கிந்தைப் படைகளைத் துணை கொள்வதற்கு மேலாக இக்காண்டத்தில் குறிக்கத்தக்க சம்பவம் ஒன்றும் இல்லை. வாலி வருகை இல்லாமல் கூட இராமகாதை நடையிடமுடியும். அயோத்தியிலும் ஆரண்யத்திலும் ஏற்பட்ட திருப்பு முனைகள் ஏதும்



www.saivamonline.com

இக்காண்டத்தில் இல்லை. வாலிவதப் பகுதி ஓரளவு கிஷ்கிந்தா காண்டத்திற்குச் சுவை கூட்ட உதவுகிறது.

***இராவணனை வெற்றி கொண்டு, சீதையை மீட்பதற்குக் கிஷ்கிந்தைப் படைகளைத் துணை கொள்வதற்கு மேலாக இக்காண்டத்தில் குறிக்கத்தக்க சம்பவம் ஒன்றும் இல்லை. வாலி வருகை இல்லாமல் கூட இராமகாதை நடையிட முடியும்.***

## புகழ்ச்சியில் ஓர் உள்நோக்கம்

கம்பன் நிகழ்த்தும் அற்புதத்தை இனிக் காணலாம். வாலி மீது இராமன் விட்ட கணையை, வாலி தன் ஆற்றலால் தடுத்து நிறுத்தி, அம்பில் இராமன் என்ற பெயர் இருப்பதைக் கண்டு திகைக்கிறான். அவசரத்தில், போர் முறைக்குமாறாக இராமன் அம்பு எய்த நேரத்தில் கம்பன்,

*மும்மை சால் உலகுக்கு எல்லாம்*
*மூலமந்திரத்தை முற்றும்*
*தம்மையே தமர்க்கு நல்கும்*
*தனிப்பெரும் பதத்தைத் தானே*
*இம்மையே எழுமை நோய்க்கும்*
*மருந்தினை இராமன் என்னும்*
*செம்மை சேர் நாமம் தன்னைக்*
*கண்களில் தெரியக் கண்டான்.*

என்றெல்லாம் இராமனின் புகழ் எடுத்து உரைத்து மகிழ்வதில் ஒரு நோக்கம் இருப்பதாகவே தோன்றுகிறது.

## இறைமை நோக்கிய பயணம்

பக்குவம் பெற்ற சீடனைக் குருநாதன் பல்வேறு தீட்சை முறைகளால் ஆட்கொள்வான். தத்துவ நூல்கள் தீட்சை முறைகளைப் பலவாக விரித்துரைக்கும். கண்பார்வையில் ஆட்கொள்ளுவது நயனதீட்சை. மனத்தால் நினைத்து உய்விப்பது மானத தீட்சை. சும்மா இரு, சொல்லற என்பன போல் ஓரிரு சொற்கள் கூறி ஆட்கொள்வது வாசக தீட்சை. வார்த்தைக்கு இணையானது எழுதப்படும் எழுத்தும் என்பது மந்திர நூலார்க்கு உடன்பாடு. விபூதி, நீர் முதலியவற்றில் மந்திரங்களை எழுதி ஆட்கொள்வதும் ஒரு வகை வாசக தீட்சையே என்பதைச் சாத்திர உரைகாரர்கள் ஏற்கின்றனர்.



www.saivamonline.com

*தத்துவ நூல்கள் தீட்சை முறைகளைப் பலவாக விரித்துரைக்கும். கண்பார்வையில் ஆட்கொள்ளுவது நயனதீட்சை. மனத்தால் நினைத்து உய்விப்பது மானத தீட்சை. சும்மா இரு சொல்லற என்பன போல் ஓரிரு சொற்கள் கூறி ஆட்கொள்வது வாசக தீட்சை.*

## ஏதிலாரும் எளியர் என்றால்?

பல்வேறு நற்பண்புகளுக்கு உறைவிடமான வாலி மீது அம்பின் ஸ்பரிசம் பட்டமை, இராமன் என்ற நாமத்தை அவன் கண்களில் தெரியக்கண்டமை, மெல்ல மெல்ல வாலியின் மீது ஒரு வித மாற்றத்தை, ஈடேற்றத்திற்கான பயணத்தைத் தொடங்கிவைத்தன. நல்ல குருநாதன் நம்மை வருத்தவது கொல்ல அல்ல... பொல்லாக் குணம் போக்க என்பது ஒரு பழ மொழி. ஆரம்பத்தில் துன்பமாகத் தெரிவன காலப்போக்கில் நம் நன்மைக்காகத்தாம் என உணர வருவதைப் புரிந்து கொள்வது இயலும். மனிதன் பாதி, மிருகம் பாதி என்ற நிலை மாறி, ஒரு நேரத்தில் மனிதன் பாதி, தெய்வம் பாதி என்ற நிலைமை தலைப்படும். மானுடத்தில் நின்று வாதிட்ட வாலிக்கு இராமன் உரைத்த ஒன்று சிந்தனையைக் கௌவிப் பிடித்திருக்கவேண்டும்.

*ஆதலானும் அவன் எனக்கு ஆருயிர்க்*
*காதலான் எனலானும் நிற்கட்டனென்*
*ஏதிலாரும் எளியர் என்றால் அவர்*
*தீது தீர்ப்பது என் சிந்தைக் கருத்தரோ*

எளியாரை வலியார் அடித்தால், வலியாரைத் தெய்வம் அடிக்கும் என்பது பழமொழி. அதுவே தலையாய இறை இலக்கணமும் ஆகும். தம்மால் துன்புறுத்தப்பட்ட, ஓடி ஒளிந்த தம்பி சுக்கிரீவன் திக்கற்றுத் தவித்தான். அவனுக்குத் துணைவந்த இது தெய்வமே என்ற ஞானம் வாலி உள்ளத்தே தலைஎடுக்கலாயிற்று.

*எளியாரை வலியார் அடித்தால், வலியாரைத் தெய்வம் அடிக்கும் என்பது பழமொழி. அதுவே தலையாய இறை இலக்கணமும் ஆகும். தம்மால் துன்புறுத்தப்பட்ட, ஓடி ஒளிந்த தம்பி சுக்கிரீவன் திக்கற்றுத் தவித்தான். அவனுக்குத் துணைவந்த இது தெய்வமே என்ற ஞானம் வாலி உள்ளத்தே தலைஎடுக்கலாயிற்று.*



www.saivamonline.com

## பேரின்பப் பதம் தலைப்படுதல்

தம்பியால் தனக்குற்ற சிறுமைகளை, முற்றாக மனத்தடத்தை விட்டு நீக்குகிறான் வாலி. கம்பன் அவனைச் சிறியன சிந்தியாதான் என அடையாளப்படுத்துகின்றான். இத்தனை நேரம் வாதிட்ட செயலுக்கு வாலி மன்னிப்பு வேண்டுகின்றான். தீயன பொறுத்தி எனச் சொற்கள் மெலிதாக வெளிவருகின்றன. ஞானம் தலைப்பட, தண்டனையே பரிசாகப் புலப்படத் தொடங்குகிறது. மானுட இராமன் மறைய, தெய்வம் தலைப்படுகிறது.

*ஏவுகூர் வாலியால் எய்து நாய் அடியனேன்*
*ஆவிபோம் வேளைவாய் அறிவு தந்து அருளினாய்*
*மூவர்நீ, முதல்வன்நீ, முற்றும்நீ, மற்றும்நீ,*
*பாவம்நீ தருமம்நீ பகையும் நீ உறவும் நீ*

தோத்திர வாசகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்படுகின்றன. தம்பியையும் அனுமனையும் மன்னிக்கும் பண்பு, மரண வாயிலில் தலைப்படுகின்றது. எல்லாவற்றையும் ஆண்டவன்பால் ஒப்புவிக்கும் உயர் மனநிலை உருப்பெற்று எழுகிறது. அவன் ஆவி பிரிகிறது. கர்ணனுக்குக் கிடைத்தது போல் பேரின்பப்பதம் வாலிக்கு வாய்க்கிறது.

*உலகம் ஏழும் ஏத்தின இறந்து வாலி*

அந்நிலை துறந்து, வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான் என்று கம்பன் முடிக்கிறான். யான் எனது என்னும் செருக்கற்றவர் புகும் வீட்டுலகம் வாலிக்கு இராமனால் வாய்க்கிறது. அதனால் தான் பலர் இப்பகுதிக்கு வாலி மோட்சம் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

---

***ஒரு மானுடன் தெய்வமாக மாறுவதைச் சுட்டிய கம்பன், தெய்வமும் மானுட உறவு கொண்டால் குற்றமும் குறையும் கொண்டதாகவே இருக்க முடியும் என்பதை ஏற்கவே செய்கிறான்.***

---

## பழி பூண்டு வாழ்விக்கும் திறம்

ஒரு மானுடன் தெய்வமாக மாறுவதைச் சுட்டிய கம்பன், தெய்வமும் மானுட உறவு கொண்டால் குற்றமும் குறையும் கொண்டதாகவே இருக்க முடியும் என்பதை ஏற்கவே செய்கிறான்.



www.saivamonline.com

சேக்கிழாரின் பெரிய புராணத்தில் திருநீலகண்டத்துக் குயவனார் வரலாறு நாம் அறிந்ததே. ஒரு திருவோட்டைச் சிவன் திருநீலகண்டரிடம் கொடுத்துப் பாதுகாக்க வேண்டுகின்றார். பின் தம் தெய்வ ஆற்றலால் தாம் கொடுத்த ஓட்டைத் தாமே மறையச் செய்கிறார். பின் ஒன்றும் அறியாதவராய் நீல கண்டரிடம் ஓடு கேட்டு வல் வழக்கிடுகிறார். சிவன்பால் இது என்ன நியாயம் என்ற கோபம் நம்முள் எழுகிறது. இறைவன் செயல் பிழை என்கிறது நம் உள்ளம். ஆம் பிழைதான்; குற்றம் தான். இறைவன் ஏன் இதனைச் செய்தான். தன்னைத் தாழ்த்திக் கொண்டும், பழிபூண்டும் தம் அடியார்களை உயர்த்திப் பிடிப்பதில்தான் இறைமையே ஒளிபூக்கிறது.

## இராமன் தெய்வமாதல்

கண்ணன் பழி பூண்டு பாண்டவரைக் காத்த சம்பவங்கள் பலவுண்டு பாரதத்தில். இராமகாதையில் வாலிவதம் ஒன்றே உண்டு. மானுடனாகப்பார்த்தால் இராமனிடம் குறைகாண இடம் வைக்கிறான் கம்பன். தெய்வமாகப்பார்த்தால் பூரணமாகவே காட்டிநிற்கிறான். வான்மிகத்தில் மனிதனாக நின்ற இராமனைத் தமிழ் இராம காதையில் தெய்வமாக்கும் கம்பனின் முயற்சியில் வாலி வதப் பகுதி ஒளிபூத்து நம் நெஞ்சில் நிறைகிறது.

---

***கண்ணன் பழி பூண்டு பாண்டவரைக் காத்த சம்பவங்கள் பலவுண்டு பாரதத்தில். இராமகாதையில் வாலிவதம் ஒன்றே உண்டு. மானுடனாகப்பார்த்தால் இராமனிடம் குறைகாண இடம் வைக்கிறான் கம்பன். தெய்வமாகப்பார்த்தால் பூரணமாகவே காட்டிநிற்கிறான்.***

---

வாலி, கம்பனின் அற்புதப் படைப்பாற்றலில் கற்பார் நெஞ்சில் மட்டுமன்றி, இராமன் நெஞ்சிலும் பெருமிதமாக நிலை கொள்கிறான்.



www.saivamonline.com